ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவையை வழங்குதல்**

**2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்படுத்தல்**

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் வழங்கப்பட்ட 2024ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதிகள் (ஒழுங்குவிதிகள்), 2382/11ஆம் இலக்க 2024.04.30ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன் 2024.06.03ஆம் திகதியிலிருந்து நடைமுறையிலுள்ளது.

அதற்கமைய, இலங்கை மத்திய வங்கி பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரியாக தொழிற்படுமென்பதுடன் ஒட்டு மொத்த நிதியியல் துறையின் பாதுகாப்பையும் ஆற்றல்வாய்ந்ததன்மையையும் மேம்படுத்துவதற்கு பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களின் ஒழுங்குபடுத்தலுக்கும் மேற்பார்வைக்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவையானது "தொடர்பூட்டல், செய்தி, மாற்றல் வாயிலாக, அல்லது பதிவுசெய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைகள் வழங்குநர் உரித்தாகின்ற தீர்ப்பனவு வலையமைப்பு ஊடாக பணத்தின், காசோலைகளின், வேறு நாணயச் சாதனங்களின் அல்லது வேறு பெறுமதிச் சேமிப்புக்களின் ஏற்றுக்கொள்ளலை அத்துடன் பயன்பெறுநரொருவருக்குப் பணமாக அல்லது வேறு வடிவங்களில் நேரொத்த தொகையொன்றின் கொடுப்பனவில் ஈடுபடுகின்ற நிதியியல் சேவைகளாக இவ்வொழுங்குவிதியின் நோக்கத்திற்காக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது". அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள், ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடையீட்டாளர்களையும் மூன்றாந்தரப்பினரொருவருக்கான இறுதிக் கொடுப்பனவொன்றினையும் ஈடுபடுத்தலாம் என்பதுடன் இலங்கையினுள் அல்லது ஏதேனும் வேறு நாட்டினுள், இலங்கைக்கு அல்லது ஏதேனும் வேறு நாட்டுக்கு, அல்லது இலங்கையிலிருந்து அல்லது ஏதேனும் வேறு நாட்டிலிருந்து, ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கானதாகவிருக்கலாம்.

ஒழுங்குவிதிகளின் பிரகாரம், ஆளெவரும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் அத்துடன் பதிவுச்சான்றிதலொன்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக தவிர, பணம் மற்றும் பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் தொழிலில் ஈடுபடலாகாது அல்லது பணம் மற்றும் பெறுமதி மாற்றல் சேவை வழங்குநராக தொழிற்படலாகாது. ஆகையினால், இலங்கை மத்திய வங்கியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணத்திற்கமைவாக இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்குமாறு பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவையை வழங்குகின்ற அல்லது வழங்குவதற்கு உத்தேசித்துள்ள தகைமையுடைய ஆட்களுக்கு இத்தால் அறியத்தருகின்றது. ஏற்கனவேயுள்ள பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள், 2025.06.02ஆம் திகதியிலிருந்து பதிவுச் சான்றிதழுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

**1. விண்ணப்பதாரர்களால் நிறைவுசெய்யப்பட வேண்டிய பிரமாணங்கள் மற்றும் ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும்:**

**தகுதியுடைய விண்ணப்பதாரரொருவர்,**

i) 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பொருள்கோடலினுள் உத்தரவாதமொன்றின் மூலம் வரையறுக்கப்பட்ட கம்பனி, கரைகடந்த கம்பனி அல்லது கடல்கடந்த கம்பனியொன்றைத் தவிர, குறைந்தது ரூபாய் இருபது மில்லியன் (20 மில்லியன்) அல்லது மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய வேறு தொகையினைக் கொண்ட சேதமிழக்காத மூலதனமொன்றைக் கொண்டுள்ள 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்றாகவிருத்தல் வேண்டும்.

ii) பணம் மற்றும் பெறுமதி மாற்றல் சேவையினை வழங்குவதற்கான தொழில்களை மற்றும் நடவடிக்கைகளைப் பிரத்தியேகமாகக் கொண்டு நடாத்தல் வேண்டும்.

iii) பணம் மற்றும் பெறுமதி மாற்றல் சேவை வழங்கலுக்கான முறைமையொன்றை அல்லது நன்கு வரையறைசெய்யப்பட்ட பொறிமுறையொன்றைப் பேணுதல்/ தொழிற்படுத்தல் வேண்டும்.

**2. விண்ணப்பிக்கும் நடைமுறை**

2.1 தகைமையுடைய ஆட்கள் உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட தமது விண்ணப்பங்களைப் (https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/psd_mvts_application_form_t.docx ) என்ற இணையதளத்தலில் கிடைக்கப்பெறுகின்றது) பதிவுத் தபாலின் ஊடாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பணிப்பாளர்,
கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை,கொழும்பு 01.

2.2 விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்

i) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநராக பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்”** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

ii) விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியிடமிருந்து ஏற்றுக்கொள்ளல் அறிவித்தல் கிடைக்கப்பெறுதலின் மீது பதிவுக் கட்டணமாக ரூ.50,000 செலுத்தப்பட வேண்டும்.

3. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு, பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைத் தொழிலில் ஈடுபடுவதற்கு பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநராக பதிவுசெய்யப்படுவதற்கான விண்ணப்பதாரரின் பொருத்தப்பாட்டினைத் தீர்மானிப்பதற்கும் அத்துடன் ஏதேனும் வேறு நியதிகள் மற்றும் நிபந்தனைகளை விதிப்பதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி கொண்டிருக்கின்றது. மேலும், இலங்கை மத்திய வங்கியானது அதற்கான எந்தவொரு காரணத்தையும் தெரிவிக்காமல் பதிவுச்சான்றிதழொன்றை வழங்குவதற்கு மறுக்கலாம்.

4. இலங்கை மத்திய வங்கி அல்லது ஏதேனும் வேறு ஒழுங்குபடுத்துநர் அல்லது அரசாங்க நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தின், அனுமதியின் அல்லது அதிகாரமளித்தலின் கீழ் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநொருவராக ஏற்கனவே தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது அவ்வாறு தொழிற்படுவதற்கு தகைமையுள்ள ஆனொருவருக்கு இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

இது தொடர்பிலான ஏதேனும் மேலதிக தெளிவுபடுத்தலுக்கு, இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளவும்: தொ.பே: 0112477642 மி.அ: mvts@cbsl.lk.